உ
சிவமயம்

# ஸ்கந்த தீபம்

## ஸ்கந்தன் திருக்கோவில்

## கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை - சுன்னாகம்
17-03-2002

உ

சிவமயம்

# ஸ்கந்த தீபம்


## கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

வெளியீடு

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.
17-03-2002

ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# ஸ்கந்தன் திருக்கோவில்



தமிழ் வளர்க்கும் இதயத்தில் தான் வளருந் தெய்வம்
அமிழ்தினும் இனிய சொல்லால் முருகனென்ற தெய்வம்
சொல்லுக்குப் பொருள் கூறிச் சுவைதந்த தெய்வம்
சொல்லாகிப் பொருளாகிச் சுவையான தெய்வம்.

உ
சிவமயம்

# உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்
# திரு.அ.தற்பரானந்தன் அவர்களின்
# வாழ்த்துரை

கந்தரோடைக் கிராமத்தின் கலங்கரை விளக்காக விளங்குவது ஸ்கந்தவரோதயக் கல்லூரி.இக்கல்லூரி ஸ்தாபகர் கந்தையா வள்ளல் உயர்ந்த முருக பக்தர்.கந்தபுராண பாரம்பரியத்தில் தன் வாழ்வை அமைத்தவர்.அதன் இலட்சணமாக தான் அமைத்த கல்லூரிக்கு ஸ்கந்தப் பெருமானின் திருநாமத்தைச் சூடிப் பேருவகை கொண்டவர்.

அவரின் உயர் இலட்சியமான சைவ மாண்பினைப் பேணும் எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் தமது பரிபூரண அர்ப்பணிப்பால் அழகிய திருக் கோயிலை அமைத்திருப்பது எமக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஸ்கந்தப் பெருமானின் கும்பாபிஷேகத்தோடு எமது கல்லூரி மேலும் பெரு வளர்ச்சி காண வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கந்தரோடை**

திரு.அ.தற்பரானந்தன்
**உதவிக்கல்விப் பணிப்பாளர்.**

உ

# அதிபரின் பிரார்த்தனை உரை

ஸ்கந்தப் பெருமான், கோவில் கொண்டெழுந்தருள விரும்பிய பேறதனால், நூதன ஆலய, நூதனப்பிரதிஷ்டா மகாகும் பாபிஷேகம் இன்று மாட்சியாய் அரங்கேறுகிறது. அவன் அருளாலே அவன்தாள் வணங்க, கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம், கவினுறு ஸ்கந்தன் திருக்கோவிலைத் தம் காணிக்கையாக எமக்களித்து வணக்கநிலை பெற்றுள்ளது. திரு.ஆறு.திருமுருகன் அவர்களது சீரிய பணியில் ஆசிரிய குழாமும் இணைந்து, ஆலய நிர்மாணப் பொறியியலாளர் திரு.ம.பொ. திருவருட்செல்வமூடாக, ஸ்கந்தன் - பாலமுருகனாய் அருளாட்சி புரிகின்றான். அற்புதமான ஆலயம். நாம் அனைவரும் ஞான தீபம் ஏற்றி, மாணவ சமுதாயத்தினை மாண்புபெறச் செய்வோமாக.

முருகனின் நாமத்தைச் சொல்லச்சொல்ல
உருகுதே மனம் மெல்லமெல்ல

எனப் பிரார்த்திக்கும் பாக்கியத்தைப் பெறுகின்றேன்.

க.சிவாஜி
(அதிபர்)

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
17-03-2002.

# செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

புகழ்பூத்த ஸ்கந்தா அன்னைக்குப் பொற்கோவில் அமையப்பெற்ற அற்புதம் திருவருட் பேறினால் கைகூடியுள்ளது. ஸ்கந்தா சமூகத்தின் பேராவலைக் கொழும்பு பழைய மாணவர் சங்கம் மனநிறைவோடு நிறைவேற்றியுள்ளது. மாமல்லபுரத்திலிருந்து, அருள்பாலிக்கும் பாலமுருகன் எடுத்துவரப்பட்ட பேற்றினையும், இராஜஇராஜேஸ்வரி அம்பாள் கிடைத்த மகிமையையும் யான் தெய்வீகப்பேறாகக் கருதுகின்றேன். திரு.ம.பொ.திருவருட்செல்வம் அவர்களின் சிந்தையில் முருகன் குடியிருந்த மாட்சியினால் மிகவும் கச்சிதமாக ஆலயம் கட்டப்பெற்று இன்று கும்பாபிஷேகம் நிறைவாக அரங்கேறியுள்ளது. ஸ்கந்ததீபம் ஒளிப்பிரவாகமாகி, யாவர்க்கும் அருட்கடாட்சம் கிடைத்திட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஆறு.திருமுருகன்.

# பிரதி அதிபரின் அருளுரை

மாவிட்டபுரத்தில் கந்தனுக்கு ஆலயம் எழுப்பிய அரசி மாருதப்புரவீகவல்லி விஜயனின் சகோதரன் வழிவந்த உக்கிரசிங்கன் இவள் கணவன் இவர்கள் அரசோச்சிய இடம் கந்தரோடை.

இத்தகு பெருமை வாய்ந்த பதியில் கந்தன் ஆலயம் இல்லாக்குறை இன்றுடன் தீர்கிறது. முருகனின் அருளாட்சியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சந்ததம் புகழ் கொண்டு வாழ்க!

வி. இலட்சுமணன்
பிரதி அதிபர்.

ஸ்கந்தன் துணை

இராகம் : சண்முகப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

கந்தனுக்கொரு கோவில் - கலைவாயில்
ஸ்கந்த வரோதயா பைந்தமிழ் தரும் நாவில் (கந்தனுக் கொரு கோவில் .........)

அனுபல்லவி

செந்தமிழ் சைவமும் சீலம் செழித்தோங்கும்
நந்தமிழ் பண்பாடு நறுங்கலை மிளிர்ந்தோங்கும் (கந்தனுக் கொரு கோவில் ........)

சரணம்

குன்று தோறும் ஆடும் குமரனருள் கொழிக்கும்
நன்று மிளிர்ந்தே கல்வி நயம்பெறு கலை செழிக்கும்
கன்றுதற் கிரங்கியே கனிந்திடும் பசுப்போல
என்றும் கந்தன் எமக்கு இரங்கி அருள் சுரக்கும் (கந்தனுக் கொரு கோவில் ........)

ஆக்கம் : கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

## "ஸ்கந்தனுக்கோர் கோவில் ஸ்கந்தாவிலே"

ஸ்கந்தனுக்கோர் கோவில் ஸ்கந்தாவிலே என நினைக்கும் போது என் மனம் பூரணமாய் மகிழ்ச்சியால் நிறைகின்றது. மாணவனாய் இருந்தவேளை எமது கல்லூரியை ஆலயமாகவும், கற்பித்த ஆசான்களைத் தெய்வமாகவும் மதித்துப் பூஜித்ததால் அவ்வேளை கல்லூரிக்கு ஆலயமொன்று தேவை என யாரும் உணரவில்லை, பொருளாதார இலக்குகளை நோக்கி உலகம் உருள ஆரம்பித்தவேளை அறம்சற்று விலகிச்செல்ல, மனிதத்திற்கு தொய்வு ஏற்பட ஸ்கந்தா நாமம் வளர ஸ்கந்தனுக்கு ஒரு கோவில் அமைத்து மாணவச்செல்வங்களை ஆன்மீக வழி நோக்கிச் செல்ல வழிசமைத்த சகோதர ஆசிரியர் முன்னாள் பிரதி அதிபர் கனக. புவனேந்திரநாதன் அவர்களையும் அன்புக்குரிய மாணவன் செல்வரத்தினம் காசிநேசனையும் இவ்வேளையில் நினைவு கூறல் சாலவும் சிறந்தது.

இன்று ஸ்கந்தனுக்கு ஒரு பொன் ஆலயம் அமைத்து எம்மை அற , ஆன்மீக வழிக்குச் செம்மைப் படுத்திய சகோதர ஆசான் தம்பி ஆறு. திருமுருகனையும், நாணலைப் போல எதற்கும் இசைவு பெறும் அதிபர் க . சிவாஜி அவர்களையும் தன்னலங்கருதாத் தொண்டன் ம.பொ.திருவருட்செல்வம் அவர்களையும் இந்நன் நாளில் போற்றிப் பெருமிதமடைகின்றேன். இயலாமை என் அகராதியில் இல்லை என எமை வழி நடத்தும் திருமுருகன் நாமத்தால் இறையருள் பெற்ற எம் கல்லூரி பல் நூற்றாண்டு வாழ வாழ்த்துகின்றேன்,

சிவகுரு மகேந்திரன்
பகுதித்தலைவர் SLTS - I

சிவமயம்

ஸ்கந்தன் துணை

## ஸ்கந்தன் கருணையில் ஸ்கந்தா

காப்பு

திருநிறை ஒளிர்வே லண்ணல்
கீர்த்தியை போற்றி நல்ல
அருள்மிகு ஆலயம் அமைத்து
குடமுழுக் கேற்று நாளில்
பொருள்செறி பிரண வத்தின்
பொலிவுறு தோற்றங் கொண்ட
கருணையின் வைப்ப தாகுங்
கணபதி காப்பதாமே

ஸ்கந்தவ ரோதய எங்கள் கல்லூரி
சந்ததமும் புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே"

ஸ்கந்தன் கருணையால் எந்தை யெனத்தகு கந்தைய வள்ளலின் சிந்தையிலெழுந்த கல்லூரியைப், போற்றி செய்வோம் எங்கள் கல்லூரித் தாயைப் பொலிவுடன் மாணவர் கூடி" என்றுஎமது கல்லூரி அன்னைக்குக் கீதம் பாடிய அமரர் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் எம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

"ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம், ஓங்கு விஞ்ஞானமும் உயர்தரு கலைகளும் ஒருங்கு சேரப் பெற்ற நன்மக்கள் பற்பல துறைகளில் மிளிர்ந்து உலகெங்கிலும் மகிழ்வொடு வாழ்வதை நாம் இன்று காண்கின்றோம். அன்னவர் யாவரும் நன்றிமறவாச் சிந்தையொடு" உறவென்றும் நீயே! உண்மையோடுனக்காய் உழைத்திடுவோம் என்றும் நாமே! என்று இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து கல்லூரிக்குச் சேவைகள் புரிகின்றனர்.

கொழும்பு பழைய மாணவர்கள் ஒன்று கூடி எம் அன்னை ஸ்கந்தாவிற்குச் செய்யும் பெரும்பணிகளுள் ஒன்றாகவே புதிய ஸ்கந்தன் கோவில் உருப் பெறுகின்றது. இவர்கள் அண்மையில் தாபகர் உருவச்சிலையினையும் கல்லூரி வளாகத்தில் நிறுவியமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறே ஏனைய நாடுகளின் பழைய மாணவர்களும் கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்கு அவ்வப் போது உதவி வருவதையும் கல்லூரி என்றுமே மறப்பதற்கில்லை.

ஸ்கந்தன் கோவில் ஆரம்ப ஊழியனாக எனக்குக் கிடைத்த வாய்ப்பு, யான் செய்த நல்வினைப்பயனேயாகும். இதற்கெல்லாம் அனுசரணையாக இருந்து எனக்கு வழிகாட்டிய முன்னாள் அதிபர் அமரர் பொன். நாகரத்தினம் அவர்களையும் பின்னர் கடமையாற்றிய அதிபர்களையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். ஸ்கந்தன் கோவில் ஒரு புனித அருள் நிறைந்ததாகக் காட்சி தரும் வேளையில் மலையில் வேலைப் பிரதிஷ்டை செய்து பழநிமலைத் தோற்றத்துடன் காட்சியளிக்க உதவியவர், சுன்னாகம் பழனி கோவில் சுவாமி பழநிவேல் ஆவார். இவருக்கும் எமது நன்றிகள். எல்லாம் ஸ்கந்தன் திருவருளேயாகும்.

முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்கள் இவ்வாலயத்தின் அருட்தோற்றத்தினை வியந்து வணங்கிச் சென்றதும் சிறப்புக்குரியது. கவி மாமணி பிரம்ம ஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள் இங்கு வருகை தந்த போது ஸ்கந்தன் கோவிலின் அருட்காட்சியை வியந்து பாடிய பாடல் இம்மலரில் இடம் பெற்றுள்ளது, குறிப்பிடத்தக்கது.

"ஸ்கந்த தீபம்" சஞ்சிகை பல வருடங்களின் பின் வெளிவருவதையிட்டும், இவ்வேளையில் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்கந்தன் கோவிலின் குடமுழுக்கு வைபவமும் நிகழ்வதும் எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. ஒரு சாதாரண வழிபாட்டறையாக நால்வரின் படங்களுடன் இருந்த இடமானது ஒரு கோவிலாக மாறி

பல்லாண்டுகள் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அருளுடன் விளங்கிய ஸ்கந்தப் பெருமான் இன்று கல்லூரி வளாகத்தினுள் ஆலயஅமைப்புக்களுடன் விளங்குவது அவனருளாலேயாகும். இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், சிறப்பாக சமயத்துறை சார்ந்த அனைவரும் பெருமைக்கும் ஸ்கந்தனின் பேரருளுக்கும் உரித்தாவர்.

ஸ்கந்தன் கோவிலில் வீற்றிருக்கும் ஒளிர் பாலமுருகன் விந்தைமிகு சிறப்புக்களை எல்லாம் நம்தமிழ் சைவ, பிறமதத்தவரெல்லோருக்கும் அருள் பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

வளரிள மதியெனவே
வாழிய எங்கள் கல்லூரி

கனக.புவனேந்திரநாதன்
முன்னாள் பிரதி அதிபர்

## பகுதித் தலைவரின் செய்தி

ஸ்கந்தப் பெருமானின் பெயரைக் கொண்டு கந்தரோடையின்கண் இயங்கும் எமது கல்லூரி ஸ்கந்தன் அருளால் அன்று தொடக்கம் இன்றுவரை புகழ்மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது. அருள்பொழியும் ஆறுமுருகனை நாம் பாலமுருகனாக கண்டு களிக்க, தற்போது புதிதாக அமையப் பெற்ற ஆலயம் வகை செய்வதையிட்டு பேரானந்தம் அடைகின்றேன். முதன் முதலாக நாம் பார்த்திருக்க மிக விரைவாகவே கட்டி முடிக்கப்பட்டு, நாம் பணிபுரியும் காலப்பகுதியிலேயே முதலாவது குடமுழுக்கைச் சந்திப்பது, நாம் செய்த பெரும் பாக்கியம் என்றே கொள்ளலாம். ஆலயம் இல்லை என்ற குறைபாட்டினை நிவர்த்தி செய்து இப்பணி சிறப்புற முன்நின்று உழைத்தவர்களுக்கும், நிதியுதவியளித்த கொழும்பு பழைய மாணவர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தாகுக.

இ.ஜோர்ஜ



உ

சிவமயம்

# (உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் .........)

இறைவா! மண்ணிலே வந்த பிறவியே எமக்கு வாலிதாம் இன்பம் பயக்கவல்லதாகும். உனது சித்தப்படியே யாவும் நல்லபடியாக அரங்கேறுகின்றன. 1894ம் ஆண்டிலே ஸ்கந்த எனும் நாமத்தோடு ஸ்கந்தவரோதயக்கல்லூரி, பெருந்தகை கந்தைய வள்ளலினால், மருதநில மாடமாக எழுப்பப்பெற்றது. அன்று முதல் இன்றுவரை 108 வருடங்களாக ஸ்கந்தா சமூகத்தால் ஸ்கந்தமந்திரம் நல்லவண்ணம் போற்றப்பட்டு வருகிறது. கல்லூரி மாடத்தின் ஒரு பகுதி வணக்கத்திற்குரிய புனித இடமாகக் கருதிய பேறதனால், அவனியின் பல வெற்றி நாயகர்களை இன்றும் கண்டுவருகின்றோம். இற்றைவரை கடமையாற்றிய, ஆற்றிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவருமே ஸ்கந்தப்பெருமானுக்குப் புகழினையும், மகிமையையும் சேர்த்துக் கல்வியில் வல்ல பேற்றினை அள்ளித்தந்துள்ளார்கள். அதிபராம் அமரர்.V.சுப்பிரமணியம் அவர்களும், பிரம்மஸ்ரீ.K.பாலசுந்தரக்குருக்கள் அவர்களும், வித்துவான் ஆறுமுகம் அவர்களும், முன்னாள் பிரதி அதிபர் திரு.க.புவனேந்திரநாதன் அவர்களும் வழிபாட்டினை வழிகாட்டுவதில் அதீத சிரத்தையுள்ளவர்களாக மிளிர்ந்து தெய்வீகச் சூழலை உய்விக்கச் செய்துள்ளார்கள்.

காலத்தின் தேவையினை உணர்ந்த கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தினர் தற்போதைய கல்லூரி முதல்வர் திரு.கந்தசாமி சிவாஜி தலைமையிலான நிர்வாகத்தில் அதீத நம்பிக்கை வைத்த பேறதனால், திரு.ஆறுமுகம் திருமுருகன் அவர்களை ஸ்கந்தாவின் பிரதிநிதியாக வழிசமைக்க இறைவன் எண்ணியதனால், 2001 தைப்பூச நந்நாளில் ஸ்கந்தன் திருக்கோவிலுக்கான அடிக்கல் அதிபர் தலைமையில், ஆசிரிய, மாணவர் குழாம் சூழ்ந்திருக்க, தெய்வீக நாமம் மேன்மைகொள்ள நாட்டப்பெற்றது.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஆலயம் கட்டுவதற்குரிய சகல செலவுகளையும் பொறுப்பேற்றதனால், தம்பணியினை முழுதாக அர்ப்பணிக்கக்கூடிய ஓர் விசுவாசியை ஸ்கந்தப்பெருமான் விரும்பினதாலோ என்னவோ பொறியியலாளர் உயர்திரு.மதியாபரணம் பொன்னம்பலம் திருவருட்செல்வம் என்பவர் ஆலயநிர்மாணப் பொறுப்பினை மனதார ஏற்றுக்கொண்டார். யாவும் அவன் செயல் ஆலயம் உருவநிலை பெற்றது. முருகன் திருமுருகனுக்குள் இருந்தபடியினால், ஆன்மீகப் பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திருமுருகன் அவர்கள் தெய்வீக சம்பத்துக்களை எல்லாம் வேண்டியவாறு வேண்டுபவர்க்கு, வேண்டிய இடத்தில், வேண்டிய முறையில் அளித்திடுவார். அந்நிலை இங்கேயும் தரப்பட்டது.

இன்று (17-03-2002) கும்பாபிஷேகம் பாலமுருகன் மூலமூர்த்தியாக அருள்பாலிக்க, விநாயகரும், இராஜஇராஜேஸ்வரியும் வாசலின் இருமருங்கும் கொலுவிருக்க, ஸ்கந்தன் திருக்கோவில் தெய்வீக நாமங்களால் பேரொளி பெறுகின்றது.

அருட்கவி திரு.சீ.விநாசித்தம்பிஐயா அவர்களும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா அவர்களும், முன்னாள், வைத்தீஸ்வராக்கல்லூரி அதிபர் திரு.சி.சிவசரவணபவன் ஐயா அவர்களும் ஆசிகள் வழங்கி வாழ்த்திய பேறும் எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் தனது முத்திரையை, வரலாற்றுக் காணிக்கையாக எமக்களித்துள்ளது. ஸ்கந்தா சமூகம் இந்தப் பேருபகாரத்தினை மிகுந்த பயபக்தியோடு தொடர்ந்து பேணிவரும் என்பது திண்ணமே.

ஸ்கந்தா இந்துமாமன்றம் தனது தொண்டின் மூலம் ஆலயத்தினை அவதானமாக மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

எமக்குக் கிடைத்த மாணவர்கள் உண்மையிலே அதீத இறை நம்பிக்கையுடையவர்களாகையினால் வெற்றிகளையும், சித்திகளையும் ஏற்றிடுவார்கள்.

கும்பாபிஷேகத்தினைச் சிறப்பாக நிறைவேற்றிய, சிவாகமகிரியா தத்துவநிதி பிரம்மஸ்ரீ செ.இரவிச்சந்திரக்குருக்கள் தலைமையிலான அந்தணப்பெருந்தகைகளை வணங்குகின்றோம்.

மண்ணிலே வந்த பிறவியே எமக்கு வாலிதாம் இன்பம் பயப்பதால், உன்னுடைய நினைப்பதனைத் தலைமேற்கொண்டு, நன்றியோடு நிறைவெய்துகின்றோம்.

ஆசிரியர் .கே.எஸ்.சிவஞானராஜா
இந்து மாமன்றத்தலைவர்.



உ

## மிகு சித்தியான திருக்கோவில்

மருத நிலமதனில் மருவு மழகுபதி
மனதுக் குகந்தரோடை
மாரி பொழியுநற் கல்வி வளம்பெறும்
மாதவ(ஸ்) கந்தவரோதயா
கருத ஒருமுருகன் கோவில் விரும்பிடக்
கொழும்பு பழைய மாணவர்கள்
கனிந்த ஆலயம் ஸ்கந்தன் ஆலயம்
கமழு கும்பாபிஷேகம்
ஒருத ராலும் முடியாத கருமமிது
உண்மை! அவன்செயலிது
ஓர்மமாய் இதனைக் கட்டிமுடித்தவர்
உத்தமர் திருவருட்செல்வமே
மிருதுவான கலை யழகு சுரந்திடும்
மிகு சித்தியான திருக்கோவில்
மேன்மை யுறுசைவ மாணவர் அனைவரும்
முருக நாமத்துடன் வெல்வாரே.

கே.எஸ்.சிவஞானராஜா

## ஆசிரியர்களின் வாழ்த்தியல்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கந்தரோடைக் கிராமத்தின் சூழலில் அம்பாள், விநாயகர் ஆலயங்களின் மணியோசை காற்றோடு கலந்து மக்களுக்கு மன அமைதியை கொடுத்துக்கொண்டிருக்கும் வேளைதனில் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் உருவாகியுள்ள பாலமுருகன் ஆலயத்தின் மணியோசையும் பாடசாலை சமூகத்திற்கும் கிராம சூழலுக்கும் புதுஒளியை கொடுக்கும் வகையில் குடமுழுக்கு காண்பது பெரு மகிழ்விற்குரியது. பாடசாலையின் பழைய மாணவியும் பாடசாலை ஆசிரியையுமாகிய யான் பெருமகிழ்வு அடைகிறேன்.

திருமதி.சா.நாகராஜா
இந்து மாமன்றச் செயலாளர்.

ஸ்கந்தப் பெருமான் புதிதாக அமையப் பெற்ற ஆலயத்திலே எழுந்தருளியிருந்து அருளாட்சி செய்யப் போகின்ற இன்றைய தினம் (17-03-2002) ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனை என்றே கூறலாம். உண்மையிலேயே இது போற்றத்தக்கது. கல்லூரிச் சமூகத்தினரைப் பொறுத்தவரை, இது ஆத்மீகப் பயணத்தின் ஒரு மைல்கல்லாகும். அத்தோடு மாணவர்களின் சமூக மயமாக்கலுக்கான நிலைக்களமாகவும் அமைகிறது. ஸ்கந்தனுக்கு கல்லூரியில் தனிக்கோவில் இல்லை என்ற குறையும் தீர்ந்துவிட்டது. இவ்வாலய நிர்மாணத்திற்காக முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர் ஆறு. திருமுருகன், திருவருட்செல்வம் போன்றோரும், நிதியுதவியை நல்கிய பழைய மாணவரும், போற்றப்படவேண்டியவர்கள். இறைவன் எம்மை ஆசீர் வதிப்பதாக.

அவனருளாலே அவன் தாள்வணங்கும்

ந.பவன்
இந்து மாமன்றப் பொருளாளர்.

## சிந்தையிலே இன்பமள்ளிச்சேர்!

அன்னையாம் ஸ்கந்தாவை ஆண்டருள வந்துறையும்
முன்னவனே! எங்கள் முருகோனே! - சென்னிமிசை
உந்தன் பதமலர்கள் சூட்டி உளங்கனிந்தோம்
சிந்தையிலே இன்பமள்ளிச் சேர்!

தேவர் துயர்துடைக்கத் தேரேறும் வேலவா!
பாவக் கடலுட் பரிதவித்தோம் - யாவரையும்
காத்தருளக் கந்தரோ டைப்பதிக்கு வந்தஉனைத்
தோத்திரித்தால் தீரும் துயர்

எங்கள் திறனை மேலும் அதிகரிப்பாய்
எங்களுக்கும் கல்வியொளி ஏற்றிடுவாய் பொங்கிவரும்
துன்பங்கள் நீங்கச் சமாதானம் தோன்றிட
இன்முகத்தோடு ஆணை இடு!

ம.பா.மகாலிங்கசிவம்.

ஸ்கந்தாவிற்கு தம்மை அர்ப்பணித்த மும்மணிகளின் நீண்ட காலக் கனவு இன்று நனவாகிறது. மும் மணிகளால் வளர்த்தெடுக்கப்பட்ட பழைய மாணவர்களால் அக் கனவு நனவாகிறது. ஸ்கந்தாவின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் புதுப்பொலிவுற்று விளங்கும் ஸ்கந்தப்பெருமானின் அருள் என்றும் நிலைத்திருக்கும். ஸ்கந்தப் பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்புற்று நடைபெற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

திருமதி.எஸ்.தவராஜா

## "ஆலயம் தொழுவது சாலவும் நன்றே"

ஆலயம் தொழுவது சாலவும் நன்றே என்றும், "கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்றும் கோவிலின் மகிமையை ஆன்றோர் எடுத்தியம்பியுள்ளனர். கல்வியின் முன்னேற்றத்திற்கு மன ஒருமைப்பாடு அவசியம் வேண்டிய தொன்றாகும். அந்த வகையில் அமைந்துள்ள ஸ்கந்தாவின் ஆலயம் பாடசாலைச் சமூகத்திற்கு அருள் சுரந்து வளம்பெற வாழ்த்துகின்றேன்.

திருமதி.த.தவராஜா

எமது ஊரில் முருகன் கோயில் ஒன்று இல்லேயே என்ற குறையை தீர்ப்பதாக அமைவதையிட்டு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்.

திருமதி.த.திருலிங்கம்

அழகிய கந்தரோடை எனும் கிராமத்தில் கம்பீரத்துடன் எழுந்து நிற்கும் ஸ்கந்தன் கோயில் உருவாகியிருக்கின்றது. இதன் தோற்றமும் அருளும் என்றென்றைக்கும் அழியாப் புகழ் பெறட்டும். இதன் சிறப்பு ஓங்கட்டும். சைவசமயத்தவர்களாகிய எமக்கு கோயில் ஒன்று இருப்பது இன்றியமையாதது." அந்த வகையிலே ஸ்கந்தன்கோயிலும் ஒன்று. இதன் தூய்மையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடித்து அது மென்மேலும் வளர வழிவகுப்போமாக.

திருமதி.சந்தானலட்சுமி ஜெயபாலசிங்கம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஸ்கந்தன் கோவில் அமைவது மிகப் பொருத்தமானதே. இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு உதவிய அனைவருக்கும் பாராட்டுக்கள். கந்தரோடைக் கிராமத்தின் வளர்ச்சிக்கும், எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும் இவ்வாலயம் அடிக்கல்லாக அமையும் என நம்புகின்றேன். கும்பாபிஷேகம் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செல்வி. ஜெகதீஸ்வரி சாந்தலிங்கம்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. பாடசாலையிலேயே கோவில் அமைப்பப்பெற்ற பெரும்பேறு எமது கல்லூரிக்கும் கிடைக்கின்றது. ஸ்கந்தன் கோவிலின் கும்பாபிஷேகம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டிப் பணிகின்றேன்.

வ.நந்தீஸ்வரன்.

பாடசாலைச் சூழலில் பாலமுருகனுக்கு பழைய மாணவர்களால் ஓர் அழகிய ஆலயம் கட்டப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி தருவதையிட்டு அகமகிழ்வதுடன் கும்பாபிஷேகம் சிறக்க உளமார வாழ்த்துகின்றேன.

திருமதி.றிஷா தனஞ்சயன்

எங்கள் பாடசாலையில் வீற்றிருந்து இன்னருள் சுரக்கும் ஸ்கந்தப் பெருமானுக்கு ஆலயம் அமைப்பது அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடியதே. ஆலயத்தில் அமர்ந்திருந்து ஸ்கந்தப்பெருமான் அருளாசி வழங்கப்போகிறார். எங்களது காலத்திலேயே கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் நடப்பது எமக்குப் பெருமிதத்தை ஏற்படுத்துகின்றது. இவ்விழா நல்விழாவாக அமைய இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

குணரத்தினம் - ஐங்கரன்.

சிவனிற்கு ஓங்காரத்தின் பொருளுரைத்த குமரனின் கோயில் எமது கல்லூரியில் அமையும் இத்தருணத்தில் கல்லூரி அதன் செயற்பாடுகளில் மேலும் பாரிய வளர்ச்சியுறும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடத்திலும் இருக்கின்றது. சிறார்களின் கல்வி மேன்மேலும் வளர்ச்சியுற ஸ்கந்தப்பெருமானிடம் வரம் வேண்டி நிற்போம்.

இ.சடாஷ்ஷரா.

எமது பாடசாலை வளாகத்தில் இந்த அழகான ஆலயம் நாம் பணிபுரியும் காலத்திலே உருவானதையிட்டு என்றும் பெருமகிழ்வடைகிறோம். பாலமுருகனின் அருளும் ஆசியும் என்றும் எல்லோர்க்கும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

திருமதி. A.L ராஜ்குமார்

சைவ சமயத்தவர்க்கு ஆலய வழிபாடும் முக்கியமான தொன்றாகும். கடவுளை வழிபடுவதற்குரிய சிறப்பான இடம் ஆலயமாகும். இதன்பொருள்படி ஸ்கந்தன் ஆலயம் அமைக்கப்பட்டது. சிறந்தது மனித வாழ்வில் மாணவப் பருவமென்பது மிகவும் முக்கியமான பருவமாகும். வீட்டிற்கு அடுத்ததாக மாணவரின் வாழ்வின் பெரும் பகுதி பாடசாலையிலேயே செலவாகின்றது. எனவே சைவப்பிள்ளைகள் பெரும்பான்மையாகக் கற்கும் பாடசாலை வளாவுக்குள் சைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி.விஜயரத்தினம் - விஜயமதி

நூற்றாண்டு பாரம்பரியத்தைக் கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆலயம் இல்லையே! என்ற பெருங்குறை நீங்கும் பொருட்டு செயற்பட்டு பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஸ்கந்தன் ஆலயம் கும்பாபிஷேகம் காணும் இவ்வேளையில் கல்லூரிச்சமூகத்துடன் சேர்ந்து மகிழ்வுறுவதுடன் விழா சிறப்புற எல்லாம் வல்ல ஸ்கந்தப்பெருமானை பிரார்த்தனை செய்கின்றேன்.

தா.இராசரத்தினம்

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற வாக்கிற்கிணங்க எல்லாக் கலைகளையும் எமக்கு அளிக்கின்றவனாகிய ஸ்கந்தப்பெருமான் திருக்கோவில் எமது கல்லூரியில் அமையப்பெற்று கல்லூரியின் எல்லாக் கலைகளின் வளர்ச்சிக்கும் அருள் பாலிக்க வருகின்றது. இவ் ஆலயம் புதுப்பொலிவோடு கும்பாபிஷேகம் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இராசேந்திரன் கணேசானந்தன்

எமது ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற்கு பல நாடுகளிலும் இருந்து பழைய மாணவர் சங்கங்கள் பேருதவியளித்து வருகின்றன. அவ்வழியில் எமது கொழும்பு பழைய மாணவர்கள் சங்கத்தின் ஆக்கத்தினதும் ஊக்கத்தினதும் பயனாக எமது கல்லூரியில் உருவாகியுள்ள ஸ்கந்தப் பெருமானின் ஆலய கும்பாபிஷேகம் எமது கல்லூரிக்கு மேலும் பல முன்னேற்றங்களை அளிக்க வேண்டி இக்கும்பாபிஷேகம் சிறக்க எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

கந்தையா ஸ்ரீகணேசன்.

சைவப்பிள்ளைகள் பெரும்பான்மையாகக் கற்கும் பாடசாலையாகிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகத்தினுள் ஓர் ஆலயம் அதுவும் சிறந்த கட்டிட அமைப்புள்ள ஆலயம் ஒன்று புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகம் நிகழ்வதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

செல்வி. நா. தயாளினி.

யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றிலே தனக்கென தனிஇடத்தைப் பெற்றுள்ள, புகழ்பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலே ஸ்கந்தப் பெருமானின் அழகிய ஆலயம் புதுப்பொலிவுடன் காட்சியளிப்பது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கும்பாபிடேகம் நடைபெறும் இந்நேரத்திலே கந்தப்பெருமானின் அருளும் ஆசியும் அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் இந்தக்கிராமத்து மக்கள், இலங்கை வாழ் மக்கள், உலக மக்கள் மற்றும் சகல ஜீவன்களுக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். பாவ இருள் அகன்று தெய்வீக ஒளி பரவி அனைவரும் இன்புற்றிருக்க கந்தனின் அருள் மழை அனைவர் மீதும் பொழியட்டும்.

திருமதி. சாந்தகுமார் - சிவாசினி

உ

முருகன்துணை

# ஸ்கந்தன் ஆலயம்

எமது தந்தைக்கு சமமான கந்தரோடைக்கந்தையர்களில் ஒருவரான வள்ளல் கந்தையா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இன்று உலகப் புகழ்பெற்று உலகெங்கும் உள்ள தனது மாணாக்கர்களின் ஒத்தாசையுடனும் ஆசியுடனும் மிளிர்கின்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஓர் ஸ்கந்தன ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது ஸ்கந்தா அன்னையின் மாணாக்கர்களுக்கும் வாரிசுகளுக்கும் வழிமுறையினருக்கும் ஒரு வரப்பிரசாதம் என்று கூறிவிடலாம்.

அந்தத் திருமுருகப்பெருமானே கந்தரோடையில் கந்தையா என்ற மனிதனாக அவதரித்து ஸ்கந்தாவை நிறுவினார். இன்று அந்த ஸ்கந்தக் கடவுளே ஸ்கந்தாவின் பழைய மாணவர்களினதும் முன்னோடிகளினதும் எண்ணங்களில் குடியிருந்து இங்கு முருகன் ஆலயம் நிறுவப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு காரணமாக உள்ளான். இவைகள் யாவும் வேலனின் விளையாட்டு என்று கூறிவிடலாம்.

கும்பாபிஷேகம் நன்கு நடைபெற்று எல்லோரும் இறை அருள் பெற வேண்டும் என வேண்டி நிற்கின்றேன.

"எல்லாம் அவன் செயல்"

திருமதி.யோ.விமலாம்பிகைபாகன்.

கந்தையா வள்ளலின் சிந்தையில் எழுந்த கல்லூரியில் ஸ்கந்தப்பெருமானின் குழந்தை வடிவம் எமது பாடசாலை சமூகத்திற்கு மேலும் மெருகூட்டுவது சிறப்பான அம்சம் ஆகும்.

மேலும் இவ் ஆலயத்தின் கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெறுவதுடன் மேன்மேலும் சிறப்புடன் பரிபாலிக்கவும் எல்லோருக்கும் அருள் பாலிக்கவும் வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திருமதி. கிருஷ்ணவேணி வள்ளுவதாசன்.

வளர்ந்துவரும் நவீன விஞ்ஞான யுகத்தில் ஆன்மீகப் பக்தி வலுக்குறைந்து உலகியல் நோக்கும் உலகியல் இலௌகீக சிந்தனைகளும் வளர்ந்து வரும் இக் காலகட்டத்தில் ஆன்மீக பாதையை நெறிப்படுத்தி எதிர்கால சந்ததியை வளர்த்தெடுப்பது எம் அனைவரதும் பாரிய கடமையாகும். இந்நோக்கில் பழைய மாணவரின் இத் தெய்வீக சிந்தனையை வாழ்த்துவதுடன் கும்பாபிஷேகம் சிறப்புற என் மனமார்ந்த வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி R.M. P. மரியமனோகரன்.

நீர் வளமும் நில வளமும் நிறைந்த கந்தரோடைக் கிராமத்தில் அருள் வளமும் பொலிய வேண்டுமென்ற நோக்கில் அமைக்கப்பட்டதே பாலமுருகன் ஆலயம் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும் ஆலயம் இன்றியமையாதது. இச்சிந்தனையை நெறிப்படுத்திய பழைய மாணவரை வாழ்த்துவதுடன் கும்பாபிஷேகம் சிறப்பாக அமைய இறையருள் வேண்டுகின்றேன்.

திருமதி.வாசுகி.மதனகுமார்.

### வாலிதாம் இன்பப் பேறினால் ஆலிக்கும்

| | |
|---|---|
| திரு.த.சிவகுமார் | செல்வி. கவிதா |
| திருமதி.நி.சிவபாலச்சந்திரன் | திரு.மு.நடராஜா |
| செல்வி.T.சங்கரப்பிள்ளை | திரு.அ.அன்ரன் கிறோஸியன். |
| செல்வி.R.நடராஜா | திரு. ஜெகஜீவன் |
| செல்வி. கிருஷ்ணவேணி | திரு. ஸ்ரீகணேசன். |
| செல்வி.அ.அருளானந்தம் | திருமதி. மீனலோஜினி |
| திரு. விஜயேந்திரன் | திருமதி.அ.முருகதாஸ் |

## இந்து மாமன்ற மாணவ தலைவரின் செய்தி

### ஸ்கந்தவரோதயனுக்கு ஒரு கோயில் அது கந்தன் கோவில்

ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பிரசவித்துக்கொண்டிருக்கும் ஸ்கந்தா அன்னையின் குல தெய்வமான முருகப்பெருமானுக்கு அழகான கோயில் அமைத்து அது கும்பாபிஷேகம் காண்பதையிட்டு எம் இந்து மாமன்றம் அளப்பரிய ஆனந்தம் கொள்கிறது. அருள் மழை பொழியும் பாலமுருகன் மாணவர்களின் பலமான கல்விக்கு அருளாசி வழங்கி எல்லோரும் இன்புற்று வாழ எம் மன்றத்தின் சார்பாக கந்தப்பெருமானின் திருவடிகளை தினம் பூசிப்போமாக.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க.

செ.கவிதரன்

## சிரேஷ்ட மாணவ முதல்வரின் செய்தி

வரலாற்றுப் பெருமை மிக்க சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் எமது குல தெய்வமாகிய ஸ்கந்தனுக்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டு அதற்கு கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். மாணவர்களாகிய எமக்கு இறையருள் அவசியமானது. எனவே எல்லா மாணவர்களுக்கும் கல்விச் செல்வமும் சகல சௌபாக்கியமும் இடையறாது கிடைக்கத் தமிழ்த் தெய்வமாகிய குமரன் தாள் பணிந்து வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

ப.ராதாகிருஷ்ணசர்மா

## சிற்பி ஐயாவின் சிறப்புச் செய்தி

சைவப்பிள்ளைகளுக்குச் சைவ சமயச் சூழலிலே கல்வி ஊட்டப்படல் வேண்டும் என்ற நாவலர் பெருமானின் இலட்சிய விருப்பிற்கமைய, வரலாற்றுச் சிறப்பு மிக்க கந்தரோடையிலே இற்றைக்கு நூற்றெட்டு ஆண்டுகளின் முன்னர் - 1894ஆம் ஆண்டில் - நிறுவப்பட்ட பெருமைக்குரியது ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கல்லூரியின் பிரதான மண்டபம் கட்டப்பட்டபோது அதனுடன் இணைத்து, தென்மேற்குத் திசையில் சுவாமி அறை ஒன்றும் அமைக்கப்பட்டது. விநாயகர், சிவபெருமான், அம்பாள், முருகன் சரஸ்வதி முதலிய தெய்வங்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு நாள் தோறும் தீபாராதனை நடைபெற்றது. மாலை வேளைகளில் பாடசாலை முடிந்ததன் பின்னர் கந்தபுராண படனம் நிகழ்வதும் வழக்கமாக இருந்தது. கல்லூரியை நிறுவுவதிலே கந்தையா உபாத்தியார் அவர்களுக்கும் பக்கபலமாக இருந்த சினி வாத்தியார் என்று அழைக்கப்பட்ட திரு.சீனிவாசகம், அளவெட்டி தெற்கு - அடுவம்பத்தையைச் சேர்ந்த சைவப் பெரியார் திரு.மாணிக்கம், கந்தரோடை அருளானந்த விநாயகர் ஆலயத்தின் உரிமையாளராகவும் பூசகராகவுமிருந்த நொத்தாரிஸ் பிரம்மஸ்ரீ இராமலிங்க ஐயர்

ஆகியோரும் உயர் வகுப்பு மாணவர்கள் சிலரும் புராண படனத்தைச் சிறப்பாகச் செய்து வந்தனர்.

ஆரம்பத்தில் மாணவர்களின் தொகை சில நூற்றுக்கணக்காக இருந்த காலத்தில் காலை வேளையில், சுவாமி அறைக்கு முன்பாக மாணவர்கள் ஒன்று கூடிக்கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்ட பின்னரே, கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவது வழக்கம்.

காலப்போக்கில், மாணவர்கள் தொகை பன்மடங்கு அதிகரித்தபோது, இந்த வழக்கம் மாறியது. அனைத்து மாணவர்களும் ஒரே இடத்திற் கூடுவது சாத்தியமாகாதபடியால், அவர்கள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு மண்டபங்களில் ஒரே நேரத்திற் கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபடுத்தப்பட்டனர். இது காரணமாகச் சுவாமி அறையின் முக்கியத்துவம் குறைந்த போதிலும், அதன் புனிதத் தன்மை தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தது.

சமீப காலத்தில் முன்னைநாள் உபஅதிபர் திரு.க.புவனேந்திரநாதன் போன்றவர்களின் நன்முயற்சியால் சுவாமி அறை புனரமைக்கப்பட்டதும் அங்கு நடைபெறும் விசேட தீபாராதனை பிரார்த்தனை ஆகியவற்றின் பின்னரே பரிசளிப்பு விழா போன்ற கல்லூரியின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதும் யாவரும் அறிந்தவையே.

தமிழ்த் தெய்வம் கந்தப் பெருமானின் பெயருடன் பின்னிப் பிணைந்திருக்கும் கந்தரோடையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் நாடெங்கிலும் புகழ் மணம் பரப்பி வருவதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது அந்தப் பெருமானின் அருள் வளம் என்பது வெளிப்படை. அந்த அருள் வளத்தை மேலும் பிரகாசிக்கச் செய்யும் வகையில், ஸ்கந்தா வளாகத்தில் தமிழ் முருகனுக்குத் தனிக் கோவில் எடுப்பது வணக்கத்திற்கும் வரவேற்பிற்குமுரிய திருப்பணியாகும்.

முற்றறிவுடைய முழுமுதற் கடவுளின் திருப்பாதங்களை வணங்காவிட்டால், கற்றதனாற் பயனேதும் இல்லை என்கின்றார் திருவள்ளுவர்.

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்பது அவர்தம் திருவாக்கு.

நாம் தன்னை அடைவதற்குச் சாதனமாகப் பயன்படுத்துவதற்காகவே முருகப் பெருமான் எமக்குக் கல்வியையும் அறிவையும் தந்தருளியுள்ளான் என்பதை

யாமோதிய கல்வியும் எம் மறிவும்
தாமே பெற வேலவர் தந்தனால் .......

என்று கந்தரனுபூதி அடிகளில் காட்டுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

முருகப் பெருமானின் திருவருட் பொழிவிலே முழுகித் திளைக்கும் பாக்கியத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் அருட்பணியிலே அந்தரங்க சுத்தியுடன் ஈடுபட்டுள்ள அதிபர் திரு.க.சிவாஜி அவர்களையும் செயற்கரிய செய்யும் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களையும், அனுசரணையாக இருக்கின்ற ஆசிரியர் குழுவையும், பொன்னும் பொருளும் சொரிந்து இவர்களின் கனவை நனவாக்கிய

ஸ்கந்தாப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினரையும் உளமாரப் பாராட்டுகின்றேன்.

ஸ்கந்த வரோதய எங்கள் கல்லூரி
சந்ததமும் புகழ் கொண்டே
இந்த உலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த! அருள் புரி நன்றே.

சி.சிவசரவணபவன்,
பழைய மாணவன்,
முன்னைநாள் அதிபர், வைத்தீஸ்வராக்கல்லூரி.

கந்தரோடை,
சுன்னாகம்

## எங்கள் பாலமுருகனுக்கு

"நூலாட நுதலாட நீறும் ஆட
நுண்கலைகள் பண்கமழும் துடியும் ஆட
மாலாட மறையாட மதனும் ஆட
மலர்த்தொடை தலைமாலை ஆரம் ஆட
வேலாட விழியாட விசும்பும் ஆட
விண்ணோரும் மண்ணோரும் வியந்தே ஆட
சேலாடும் ஸ்கந்த வரோதயா அருள்
சுப்பிரமணிய சுவாமி ஆடீர் ஊஞ்சல்"

பொன்னம்பலவாணேஸ்வரர் திருக்குமாரனுக்கோர் ஆலயம் எழுப்பவென்று ஸ்கந்தன் மைந்தர் நாம் கூடினோம் அன்று 2001.02.07. தைப்பூசத் திருநாளில் அருள்திரு.விநாசித்தம்பி அடிகள் நிலையம் குறித்திட உயர் திரு சிவாஜி அதிபர் அடிக்கல் நாட்டிட மழலைச் செல்வங்கள், ஆசிரியர், பெரியோர் ஒவ்வொரு கல் வைத்திட பாலமுருகனுக்கோர் பொன்னம்பலம் உள்ளங்களில் எழுந்திட்டதே.

பொன்னம்பலவாணேஸ்வரனையே குருவாக தாள் பணிந்து சிற்பியாகத் தொண்டாற்றத் துணிந்தேன், திருவருட்செல்வம் என்ற தொண்டனாகிய யான் ஆலயப் பணிக்கென்றே உயர் திரு.ஆறு. திருமுருகனால் கூட்டிய கொழும்பு பழைய மாணவர் சங்கம் நிதி நிவேதனமாக்கிட அழகன் முருகனுக்கோர் அரண்மனை கல்லூரி முன்றலில் எழுந்திட்டதே.

ஸ்கந்தவரோதயனுக்கு மட்டுமின்றி உலகிற்கே நின்று அருள் பொழிந்திட சித்தம் கொண்டானே சச்சிதானந்த சொருபியாகிய எங்கள் ஸ்கந்தப் பெருமான் இங்கு ஓங்குக சைவ நீதி, உலகெலாம் என அறிஞர் அந்தணர் பலர் கூடி கும்பாபிஷேகம் செய்தனரே இன்று 2002.03.17.

அம்பலத்தே நின்றாடும் அருட்பெரும் ஜோதி எனக்களித்த இப் பிறவிப் பணிக்கு என்றென்றும் அவன் தாள் பணிந்து என்னை அர்ப்பணிக்கிறேன். ஆலயப் பணியில் அனுசரணையாக நின்ற அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும் நன்றி கூறி வணங்குகின்றேன்.

மதியாபரணம் பொன்னம்பலம் திருவருட்செல்வம்,
ஆலய நிர்மாணப்பொறியியலாளர். (பவர் என்ஜினியேர்ஸ்)





# நன்றிகளால் உங்களை அலங்கரிக்கின்றோம்

- கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தினர்
- ஆலய நிர்மாணப் பொறியியலாளர், திரு.ம.பொ.திருவருட்செல்வம் அவர்கள்
- ஏனைய கலைஞர்கள்
- அந்தணப் பெருமக்கள்
- ஆசி வழங்கிய பேரருளாளர்கள்
- ஸ்கந்தா சமூகத்தினர்
- நிகழ்வினைச் சிறப்பித்தவர்கள்
- நித்திய பூஜைக்கு நிதியுதவி நல்கியோர்
- தொண்டு புரிந்தவர்கள்
- சுன்னாகம் மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ் உரிமையாளர்
- மலரைச் சிறப்பித்த வர்த்தகப் பெரியோர்கள்
- மலரைச் சிறப்பித்தவர்கள்

யாவரையும் வணங்குகின்றோம்

17.03.2002. ஸ்கந்தா சமூகம்.

உ
சிவமயம்

# ஸ்கந்த தீபம் ஏற்றி
# ஸ்கந்த அருள் பெறுவோம்.

# பி
# ரா
# ர்
# த்
# தி
# க்
# கு
# ம்

திரு.த.பரமேஸ்வரன்
திரு.சு.சிவபாதசுந்தரம்
திரு.S.பேரின்பநாயகம் (J.P)
திரு.P.சங்கரலிங்கம் (குமார்)

உ
சிவமயம்

**வரலாற்றுப் பெருமை மிக்க**

**எம் கல்லூரியில்**

**வடிவேலன் முருகனுக்கு**

**திருக்கோயில்**

**வெற்றித் திருக்குமரன்**

**திருப்பொலிவோடு**

**கல்லூரி மேலும் மேலும் சிறக்க**

**கந்தனை வந்தனை செய்வோம்.**



ஆ.சி.கணேசவேல் J.P (Whole Island)
இளைப்பாறிய தபால் அதிபர்
கந்தரோடை,
சுன்னாகம்

உ

சிவமயம்

ஜெயம் பெற்று நீடுவாழ

நூதன ஆலய, நூதனப் பிரதிஷ்டா

மகாகும்பாபிஷேகம்

பாரீர்

ஜெய மங்களம் பெற வாரீர்

**ஜெயமங்களாஸ் அழகுச்சோலை**

18, டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகம்

உ

சிவமயம்

# மண்ணிலே காணும் பேறுக்குள்
# மகாகும்பாபிஷேகம் காணும் பேறு
# ஆனந்தமயமானதாகும்
# யாவர்க்கும் இப்பேறு கிடைத்திட
# எங்கள் பிரார்த்தனைகள்

# CHUNNAKAM M.P.C.S
# COMMUNICATION

## Photostat & Lamination



Tele Phone & Fax

070 - 212380
070 - 212813

0094 - 70 - 212380
0094 - 70 - 212813

கே.கே.எஸ் வீதி சுன்னாகம்

உ


சிவமயம்

**மோகன முருகனை நீங்கள்**

**முன்னிலையில் வழிபட**

**ஆவன புரிந்து அவனியில்**

**அத்தனையும் தந்திடுவான்**



ஓர் அன்பர்

உ
சிவமயம்

மகா கும்பாபிஷேகம்
மானிடர்க்கு வரப்பிரசாதம்
சுகானுபவ ஸ்கந்த தீபம்
சுடர்விட்டு ஒளிரட்டும்

# சுவர்ணா வெதுப்பகம்



கே.கே.எஸ் வீதி, பெரிய மதவடி, சுன்னாகம்

உ
சிவமயம்

**கும்பாபிஷேகம் காணல் என்பது கிடைத்தற்கரிய பேறாகும் மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் வல்ல சித்திகள் கிடைத்திட நாமும் பிரார்த்திக்கின்றோம்**

சகலவிதமான பாடசாலை உபகரணங்களுக்கும்
தரமான போட்டோ பிரதிகளுக்கும்
லெமினேற்றிங் செய்வதற்கும்
தரமான ஒரே இடம்!

# ராஜா கொம்பிளெக்ஸ்



87, கே.கே.எஸ் ரோட் சுன்னாகம்

உ
சிவமயம்

**செந்தமிழ், சைவமும் சீலம் செழித்தோங்கச் சிந்தையில் குடியிருக்கும் ஸ்கந்தப் பெருமானுக்கு நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புறப் பிரார்த்திக்கின்றோம்.**

## காலத்தால் அழியாத தரமான
## புகைப்படங்களுக்கு

# சுரேன் போட்டோ



டாக்டர் சுப்பிரமணியம் வீதி
சூளானை,
சுன்னாகம்

உ

சிவமயம்

**சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்**

**இனியெதிர் காலத்தின் சிறப்பும்**

**இன்று நிகழும் மகாகும்பாபிஷேகத்**

**தினால் வளம் பெறப்**

**பிரார்த்திக்கின்றோம்.**

# கனகலிங்கம் ரெலிகொம்

**சர்வதேசத் தொலைத்தொடர்பு**

**சேவையும்**

**போட்டோ பிரதிசேவையும்.**



T.P: 070 - 212415
070 - 212701
070 - 212966

36, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்

உ
சிவமயம்

ஸ்கந்த நாமம் எங்கும்
ஒலிக்கட்டும்
பாலமுருகனின் அருள்
எங்கும்
செழிக்கட்டும்

# விதுஜா



சுப்பர் மார்க்கட் அன்
கொமினிக்கேசன்

T.P : 070 - 212216

கே.கே.எஸ் வீதி, இணுவில் சந்தி

உ

சிவமயம்

கந்தனுக்கொரு கோவில்

கலைவாயில்

ஸ்கந்தவரோதயப் பைந்தமிழ்

தரும் நாவில்

ஒலிக்கும் ஸ்கந்தப் பெருமானுக்கு நடை

பெறும் கும்பாபிஷேகம் சிறப்புறப்

பிரார்த்திக்கின்றோம்.





# கிருஷ்ணா அழகுமாடம்

இல 28, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்

உ
சிவமயம்

**நூதன ஆலய மகாகும்பாபிஷேகம், நிலையான பேறுகளை அள்ளித்தர நாமும் பிரார்த்திக்கின்றோம்.**

# ரஞ்சனாஸ்
# புடைவையகம்



இல 4, மத்திய சந்தை சுன்னாகம்

உ
சிவமயம்

# கும்பாபிஷேக தரிசனம்

# கோடி புண்ணியம், ஓடி வாருங்கள்,

# கூடிவணங்குவோம்!

"நூல்களுக்கான பணம் செலவல்ல சேமிப்பே"

இரு தசாப்தங்களாக வட இலங்கை மாணவச்
செல்வங்களுக்கு ஒளியூட்டி வழிகாட்டும்
புத்தக நிறுவனம்

# துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்

(புகழ்பெற்ற புத்தக விற்பனையாளர்களும்
புதினத்தாள்களின் பிரதம முகவர்களும்)

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்

உ
சிவமயம்

**கன்றதற் கிரங்கியே**

**கனிந்திடும் பசுப்போல,**

**என்றும் கந்தன் இரங்கி**

**எல்லோர்க்கும் அருள்தர**

**இன்றைய கும்பாபிஷேக தினத்தில்**

**இறைஞ்சுவோமாக**

செல்லையா ஜொனிற்றன் (Dip-in-P.E)
(முருகையா குமாரரூபன்
(மாணவன் உடற்கல்வித்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

உ
சிவமயம்

**கும்பாபிஷேகம் காண வாரீர்**


**ஞானதீபம் ஏற்ற வாரீர் நம்பாவம்**

**அற்றுப் போகும்**

**நாளும் நல்லவை நடக்கும்**

# சேகர் எலெக்ரோனிக்ஸ்

**ரீ.வி, டெக் திருத்துநர்**



# கே.கே.எம் கொமினிகேசன்

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைத்தொடர்பு சேவை



தொலைபேசி இல : 070 - 212690

அம்பலவாணர் வீதி சுன்னாகம்

உ

சிவமயம்

"மண்ணில் நல்ல வண்ணம்

வாழ

மகா கும்பாபிஷேகம்

மாட்சி தருவதாகும்"

மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

அனைவர்க்கும் ஏற்ற ஜவுளியகம்

# மங்கை சில்க்ஸ்



8, நவீன சந்தை சுன்னாகம்

உ
சிவமயம்

**எமது கல்லூரி முன்றலில்**

**எழுந்தருளும் அழகன் முருகனின்**

**ஆலயகும்பாபிஷேகம்**

**சிறப்புடன் நடைபெற**

**பிரார்த்திக்கின்றோம்.**



குமாரசாமி சிபானி

(மாணவி, கலைப்பீடம், பல்கலைக்கழகம், பேராதனை

குமாசாமி யாழினி

மாணவி, முகாமைத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

உ
சிவமயம்

# வேல் வேல் முருகா

# வெற்றிவேல் முருகா

# வா வா முருகா

# வடிவேல் முருகா

**ஸ்கந்தன் ஆலய கும்பாபிஷேகம்**

**சிறப்பாக நடைபெறப்**

**பிரார்த்திக்கின்றோம்.**



புலேந்திரன் பாலேந்திரா (U.K)

மயில்வாகனம் ரவிபாலா

(மாணவன், கலைப்பீடம், யாழ்பல்கலைக்கழகம்

# ஸ்கந்தப் பெருமானின் பாதம் பணிவோம்

ஸ்கந்தப் பெருமானை நாம் துதித்தால்
சுகம் எல்லாமே ஓடி வரும் – பால
முருகனை வணங்கி வந்தால்
நல்ல வாழ்க்கையும் ஓடி வரும்
(ஸ்கந்தனின்...)

முருகனின் நாமங்களை
தினந் தினம் உச்சரிப்போம்
சைவப் பெரியாரின் வழிகாட்டல்களை
நாள் தோறும் கடைப்பிடிப்போம்
(ஸ்கந்தனின்...)

ஸ்கந்தனின் அருள் கிடைத்தால்
தொல்லை துன்பங்கள் அகன்றிடுமே – பால
முருகனின் பாதம் பணிந்து
பல கலையும் கற்றிடுவோம்
(ஸ்கந்தனின்...)

கல்லூரி வளர்ந்திடவே
கந்தன் அருள் வேண்டி நிற்போம்
கல்விச் செல்வம் ஓங்கிடவே
கருணையுள்ளம் கொண்டு நிற்போம்
(ஸ்கந்தனின்...)

**திரு. மு. நடராஜா**
உடற்கல்வி ஆசிரியர்

உ
சிவமயம்

# முருகனின் நாமத்தைச் சொல்லச் சொல்ல
# உருகுதே மனம் மெல்ல மெல்ல

- ⇨ Off set Printing
- ⇨ Type Setting
- ⇨ Photocopy Service
- ⇨ Laminating
- ⇨ Roneo work

For any work your choise only one


# மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ்



14, கே.கே.எஸ் றோட் சுன்னாகம்

உ

சிவமயம்




## ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## இந்து மாமன்றம் பணிந்து வணங்குகிறது

உ

தெய்வ நம்பிக்கையுடையவர்கள்
தோற்றுப்போன சரித்திரம் இல்லை
தேவர்களே கரங்கூப்பும் கும்பாபிஷேகம்
திகழ இருக்கும் பாக்கியம் உங்களுக்குரியது
அழகன் முருகன் பாலமுருகனின் அருளாட்சி
அனைவர்க்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.


# San Raj Complex

TELECOM - FAX - PHOTOSTAT - LAMINATING

**T.P & Fax**

**070 - 212750**
**070 - 212551**

Day & Night
Service

**138, K.K.S Rd, Chunnakam**



பதிப்பு :
மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ், சுன்னாகம்